# ‘சர்வம் ப்ரம்மாஸ்மி’ கவிதைத் தொகுப்பில் காணப்படும் பின்நவீனத்துவக் கோட்பாடு

# Postmodernism Theory in ‘*Sarvam Brahmasmi*’ Poetry Collection

சரண் சுக்லாம் த/பெ ஆத்மலிங்கம் / Sharan Suklam S/O Ahtma Lingam[1]

## Abstract

Post modernism theory’s elements like Capitalism, Individualism and Rationalism have been criticised well. The utilization of these elements of Postmodernism theory within M. Navin’s ‘*Sarvam Brahmasmi*’ poetry collection is the focus of the current research. This qualitative study has obtained the data via library research method. Postmodernism theory’s elements of Capitalism, Individualism and Rationalism contents have been found to be used in ‘*Sarvam Brahmasmi*’ poetry collection. Besides the themes Capitalism and Rationalism within the contents of the poems, many of these poems are also infused with the theme of Individualism. This research is expected to amend the misperceptions regarding Postmodernism literatures among the readers while providing a path for authors to publish their best Post Modernism content in Tamil Literature.

Date of submission: 2021-05-23
Date of acceptance: 2021-10-10
Date of Publication: 2021-07-20
Corresponding author’s Name:
Sharan Suklam Ahtma Lingam Email:
sharansuklam@gmail.com

**Key Words:** Postmodernism, Capitalism, Individualism, Rationalism, Sarvam Brahmasm

### முன்னுரை

ஐரோப்பாவில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்த பல மாற்றுவகைச் சிந்தனைகளின் கலவையாகத் தோன்றியதே பின்நவீனத்துவக் கோட்பாடு ஆகும். குறிப்பிட்ட ஒரு கொள்கையை இந்தப் பின்நவீனத்துவக் கோட்பாடு கொண்டிருக்காது எனலாம் (ஜெயராசா, 2007, p.17). பலவிடங்களில் உருவான ஒடுக்குமுறைகளை விமர்சிக்கவே பின்நவீனத்துவமானது முதலில் தோன்றியதாகும் (Stephen, 2004, p.3). பின்நவீனத்துவக் கோட்பாடு தமிழிலக்கியத்தில் பல்வேறு புரட்சிக் கருத்துகளைக் கொடுத்துள்ளது. ‘சர்வம் ப்ரம்மாஸ்மி’ கவிதைத் தொகுப்பு நூலில் காணப்படும் பின்நவீனத்துவக் கோட்பாடுகள் சார்ந்த கருத்துகளை விமர்சனம் செய்யும் முறையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

### ஆய்வின் சிக்கல்

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கான சிக்கலானது, நமது தமிழ் இலக்கிய வாசகர், எழுத்தாளரிடையே காணப்படும் பின் நவீனத்துவத்தின் மீதான தவறான பார்வையைக் களைவதாகும். பின் நவீனத்துவம் என்றால் கொடுந்தமிழ் நடையிலும் அனைத்தையும் வெளிப்படையாக மட்டுமே பேசும் கொள்கை என்ற தவறான பார்வையை மாற்றுவது தேவையானது.

[1] The author is a B. Ed in Tamil Language Student in, Sultan Idris Education University, Perak, Malaysia. sharansuklam@gmail.com

## ஆய்வின் நன்மை

இவ்வாய்வினை மேற்கொள்வதால், தமிழ் இலக்கியத்தின் வாசகர், எழுத்தாளர் இடையே பின் நவீனத்துவம் சார்ந்த தவறான கண்ணோட்டத்தை களைவதுடன் தமிழ் இலக்கியத்தில் சிறந்த பின்நவீனத்துவக் கருத்துகளைக் கொண்ட படைப்புகளைப் படைக்க வித்திடலாம்.

## ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் நோக்கமானது,

1. 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் காணப்படும் முதலாளித்துவக் கருத்துகளை விமர்சனம் செய்தல்.

2. 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் காணப்படும் தனிமனிதவாதக் கருத்துகளை விமர்சனம் செய்தல்.

3. 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் காணப்படும் பகுத்தறிவுவாதக் கருத்துகளை விமர்சனம் செய்தல்.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்பாளரனான ம. நவீனின் ஆக்கத்தில் உருவான இலக்கியப் படைப்பு நூல்களில் இந்தச் 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பு நூல் முதல் கவிதைத் தொகுப்பாகும். மூன்றாண்டு இடைவெளியில் எழுதப்பட்ட கவிதைகளை எழுத்தாளர் இந்நூலில் தொகுத்து 2009ஆம் ஆண்டு வல்லினம் பதிப்பகத்தின் வழியாக வெளியிட்டுள்ளார். இக்கவிதைத் தொகுப்பில் மொத்தம் 35க்கும் மேற்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பிட்ட கருவில் அமையாது, பல கருக்களில் இக்கவிதைகள் அமைந்துள்ளன. இந்நூலை வலது புறத்திலிருந்து இடது புறத்தில் வாசிக்க கவிதைகள் தமிழிலும், நூலைத் திருப்பி இடது புறத்திலிருந்து வலது புறத்தில் வாசிக்கத் தொடங்கினால் ஆங்கிலத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. புதிய வடிவில் இந்நூலை அமைத்திருக்கின்றார் எழுத்தாளர் (நவின், 2009, p.7).

## பின்நவீனத்துவ அறிமுகம்

பின்நவீனத்துவம் என்பது குறிப்பிட்ட ஒரு கொள்கையை அல்லது கருத்தை கூறாது, பல மாற்றுவகைச் சிந்தனைகளின் கருத்துகளைத் தன்னுள் கொண்டு பல விவாதங்களை உருவாக்கி முதுர்ச்சியுடன் சிந்திக்க வைக்கிறது எனலாம் (ஜெயராசா, 2007, p.17). பின்நவீனத்துவத்திற்கு முன்பு உருவான நவீனத்துவம் தோன்றியதன் விளைவால் உருவான அரசியல் நிலையில்லாத் தன்மை, சமுதாய வகுப்புப் பிரிவினைகள், முதலாளித்துவ சிந்தனையால் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் போன்ற பல சிக்கலுக்கு பதிலாகவும் நவீனத்துவத்தின் தொடர்ச்சியாகவும் இக்கொள்கை உருவானது எனலாம். இரண்டாம் உலகப் போரின் இறுதியில் தோன்றிய இந்தப் பின்நவீனத்துவச் சிந்தனை, தனிமனிதவாதம் கூறும் தனிமனித உரிமையையும் இருத்தலியம் போன்ற பல கொள்கைகளையும் வெகுவாகப் பேசியது எனலாம் (Abdulazim Ali, 2016, p.1).

## பின்நவீனத்துவ உட்கூறுகள்

முதலாளித்துவம் வகுப்புப் போராட்டத்தை முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள வேறுபாட்டை அதிகரிக்க வழிவகுக்கிறது. இதனால், சமுதாயப் பிரிவு ஏற்படுகிறது (பள்ளிசார் கல்விக்குழு, 2020, ஜீ.8). அறுபது, எழுபதுகளில் முரண்பாடுகளால் பல சிக்கலை எதிர்நோக்கியதால் தோன்றியதே பின்நவீனத்துவத்தில் முதலாளித்துவக் கருத்து (Chithambaram & Karikalan, 2018, pp.202-203). தனிமனிதத்துவம் என்பது தனிநபரது உரிமை பற்றிய ஒரு சமுதாயக் கொள்கை ஆகும். இது இலக்கியக் கொள்கையாகவும் பல மொழிகளின் இலக்கியத்தில் மலர்ந்துள்ளது எனலாம். விரக்தி, ஏமாற்றம், கசப்புணர்வு, வாழ்க்கையின் எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கை போன்ற உணர்வுகளால் சிக்குண்ட தனிமனிதத்தைத் தகர்த்தெறிவது இங்கே பின்நவீனத்துவமாகும் (சுப்புரெட்டியார், 1988, p.426). பகுத்தறிவுவாதம் என்பது மக்களிடையே புழங்கும் மூடநம்பிக்கைகளைப் பற்றி ஆராய்ந்து விமர்சித்துச் சிக்கலைக் களையும் கொள்கை எனலாம். மக்களிடையே தோன்றி பல காலமாக இருந்து வரும் பல மூடநம்பிக்கைகளை இந்தப் பகுத்தறிவுவாதக்

கருத்தினைக் கொண்ட இப்பின்நவீனத்துவம் விமர்சனம் செய்கிறது (நவராஜ் செல்லையா, 2000, p.124).

## ஆய்வு முன்னோடிகள்

இந்தச் 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்புப் பற்றிய எந்தவொரு ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இந்த ஆய்வே இந்நூலைக் கொண்டு மேற்கொள்ளப்படும் முதல் ஆய்வாகும். ஆனால், பின்நவீனத்துவம் என்ற இத்திறனாய்வுக் கொள்கையைக் கொண்டு பல ஆய்வுகள் காலந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனலாம். இரத்தினசபாபதி பிரேம்குமார் 2016இல் மேற்கொண்ட 'பிளேட்டோவும் பின் நவீனத்துவ அழகியல் சிந்தனைகளும்' என்ற ஆய்வு பின்நவீனத்துவத் திறனாய்வுக் கொள்கையை மெய்யியல் நோக்கில் ஆராய்ந்து பின்நவீனத்துவத்தின் அடிப்படை தத்துவமாக அனைத்து முடிவுகளும் மதிப்பீடுகளும் சார்பு தன்மை வாய்ந்தவையாகக் கருதபடுகின்றது என்ற கருத்தை முன்வைத்துள்ளது (இரத்தினசபாபதி பிரேம்குமார், 2016, ஜீ.67).

தொடர்ந்து, 2018ஆம் ஆண்டு Madelaine Campbell மேற்கொண்ட பின்நவீனத்துவமும் கல்வியும் (Postmodernism and Educational Research) என்ற ஆய்வில் கல்வியில் பின்நவீனத்துவத்தின் முக்கியத்துவமாகக் கருதப்படுவது, பின்நவீனத்துவமானது ஆராயவும் ஒரு கருவியாக இருந்து பல கருத்துகளை மதிப்பாய்வு செய்ய உதவும் என்பதாகும் (Campbell, 2018, p.72). தொடர்ந்து, 2020ஆம் ஆண்டில் Peter Holtz 'பின்நவீனத்துவக் கோட்பாடு உண்மையைப் புறக்கணிப்பதா?' (Does Postmodernism Really Entail a Disregard for the Truth?) என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில், பின்நவீனத்துவமானது உண்மையை எப்போதும் ஏற்காத நிலையில் இல்லாது, இருபுற வாதங்களையும் விமர்சனம் செய்து பொதுவான பார்வையில் ஒரு முடிவை எடுக்கும் தன்மையைத் தருகின்றது என்ற முடிவைக் கண்டறிந்தார் (Holtz, 2020, p.10). இதுபோல, பல ஆய்வுகள் பின்நவீனத்துவம் சார்ந்த பல விடையங்களை கண்டறிய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலேசியப் படைப்புகள் பல இருக்க, ம. நவீன் இயற்றிய இந்தச் 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பைத் தேர்ந்தெடுத்ததன் காரணம், எழுத்தாளர் ம. நவீன் பின்நவீனத்துவச் சிந்தனையில் படைப்புகளை வெளியிடுவதில் புகழ்பெற்றவர். எனவே, இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்தக் கவிதைத் தொகுப்பு நூல் அவ்வெழுத்தாளரது பரிந்துரையில் தேர்ந்தெடுக்கப்பட்டது ஆகும்.

இவ்வாய்வு முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகளை முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டது. பின் சேகரித்த தரவுகளை வாசித்து மதிப்பீடு செய்து, தேவையான தகவல்களை மட்டும் அடையாளங்கண்டு, 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் காணப்படும், பின்நவீனத்துவக் கருத்துகளைக் கண்டறிந்து அட்டவணையைப் பயன்படுத்தி தரவுப் பகுப்பாய்வு செய்து ஆய்வின் முடிவுகளைக் கண்டறியப்படும். உருவாக்கப்படும் அட்டவணையில் தலைப்புடன் அக்கவிதை எழுதப்பட்டுள்ள கருவோடு எந்தப் பின்நவீனத்துவக் கொள்கையைக் கொண்ட கருத்தைக் கொண்டுள்ளது என்று பகுத்தாயப்படும்.

## தரவுப் பகுப்பாய்வு

*அட்டவணை 1: 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் காணப்படும் தலைப்புகளும் அதன் கரு, பின்நவீனத்துவ உட்கூறுகளும்*

| எண். | தலைப்பு | கரு | கொள்கை |
|---|---|---|---|
| 1 | மறைவிடம் | வாழ்க்கை | தனிமனிதவாதம் |
| 2 | சுழல் | வாழ்க்கை | தனிமனிதவாதம் |
| 3 | பைத்தியங்கள் | தனிமனிதப் புலம்பல் | தனிமனிதத்துவம் |
| 4 | உறக்க உறவுகள் | தனிமை | தனிமனிதத்துவம் |
| 5 | ஒரு மலர் பறப்பதுபற்றி | - | - |
| 6 | கடிகாரம் | - | - |
| 7 | காகித விமானம் | மன இறுக்கம் | தனிமனிதவாதம் |
| 8 | அக்கரையில் | - | - |
| 9 | கொக்குமரம் | அடிமைப் போக்கு | முதலாளித்துவம் |
| 10 | தாய் வீடு | - | - |
| 11 | உலகம் என்பது வண்ணம் | - | - |
| 12 | பழைய பானை | - | - |
| 13 | நல்ல வேளையாக நாங்கள் | அடிமைப் போக்கு | முதலாளித்துவம் |
| 14 | இறக்கை முளைத்த கதை | - | - |
| 15 | குழந்தையின் கால்கள் | - | - |
| 16 | தேவதைகளும் சாத்தான்களும் | மனிதனின் போலி வேடம் | பகுத்தறிவுவாதம் |
| 17 | பெருங்கனவு | ஏழ்மை | முதலாளித்துவம் |
| 18 | நினைவுக்கு வராத காரணங்கள் | காதல் பிரிவு | தனிமனிதவாதம் |

| | | | |
|---|---|---|---|
| 19 | சிதைவின் நகர்வு | காதல் பிரிவு | தனிமனிதவாதம் |
| 20 | வாழ்வு பற்றிய எழுத்துகள் | வாழ்க்கை | தனிமனிதவாதம் |
| 21 | அவள் I | காதல் | தனிமனிதவாதம் |
| 27 | நுழைதல் எனும் நிகழ்வு | - | - |
| 28 | குட்டிச்சாத்தான் | - | - |
| 29 | விழித்தல் என்பது நம்பிக்கை | - | - |
| 30 | அதுகூட இல்லை | வாழ்க்கை | தனிமனிதவாதம் |
| 31 | கானலின் சுவடுகள் | தொழிலாளியின் இயல்பு வாழ்க்கை | முதலாளித்துவம் |
| 32 | உங்கள் கடிதம் கிடைத்தது | - | - |
| 33 | மீள் பார்வை | வாழ்க்கை | தனிமனிதவாதம் |
| 34 | சர்வம் ப்ரம்மாஸ்மி | இறை | பகுத்தறிவுவாதம் |
| 35 | 0 | - | - |

இக்கவிதைத் தொகுப்பில் காணப்படும் பல கவிதைகளும் பின்நவீனத்துவத்தின் உட்கூறுகளாகக் கருதப்படும் முதலாளித்துவம், தனிமனிதவாதம், பகுத்தறிவுவாதம் போன்ற கொள்கையுடன் இயைந்து வந்துள்ளன எனலாம். இதுபோன்ற உட்கூறுகளைப் பேசப்பட்ட பல கருக்களைக் கொண்டே இத்தொகுப்பில் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இக்கவிதைத் தொகுப்பில் சில கவிதைகள் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும் திறனாய்வுக் கொள்கைக்கு ஏற்புடையதாக இல்லாததால் தவிர்க்கப்பட்டுள்ளது.

### முதலாளித்துவம்

தேர்ந்தெடுக்கப்பட்ட இக்கவிதைத் தொகுப்பில் பின்நவீனத்துவக் கொள்கைகளைச் சார்ந்த பல கருத்துகள் கருக்களாகப் பேசப்பட்டுள்ளன. முதலில், முதலாளித்துவக் கருத்துகள் என்று பார்த்தால், மக்களிடையே தோன்றும் அடிமைப் போக்கை மையமிட்டுச் சில கவிதை வரிகள் எழுதப்பட்டுள்ளன. ‘கொக்குமரம்’ கவிதையில்,

*இறுகிப் போய்விட்ட அதன்*

*கழுத்துப் பற்றி*

*அதற்கு யாருமே நினைவூட்டுவதுமில்லை*

என்ற இறுதி வரியும் ‘நல்ல வேளையாக நாங்கள்’ என்ற கவிதையில்,

*உறைந்திருக்கும் வெறுப்பினால்*

*பல சமயங்களில் தேய்க்கப்பட்டாலும்*

*நல்ல வேளையாக*

*நாங்கள் சூடாவதும் இல்லை சுடுவதும் இல்லை.*

என்ற வரியும் மேல் வருக்கத்தின் பிடியில் சிக்கி தங்களின் அடிப்படை உரிமைகளைக் கூட, கோரத் தெரியாத அடிமை தொழிலாளர்களின் நிலையைக் காட்டுகிறது. பல நாள் அதிகார வருக்கத்தினரின் பிடியில் இருந்த மக்களது வாழ்க்கை நிலை எவ்வாறு உள்ளதென்பதை இவ்வரிகள் காட்டுகின்றன. இப்படி அடிமைத்தனத்தில் இருந்தே பழகிப்போன மக்களின் வாழ்வையும் சிந்திக்கச் செய்கிறது எனலாம். பின்நவீனத்துவத்தில் முதலாளித்துவக் கொள்கை மக்களின் ஏழ்மை நிலையிலும் காணப்படுகிறது என்பதை 'பெருங்கனவு' என்ற கவிதையில்,

*நாமே மையமாகிவிடுகிற*

*கனவுகளில்*

*நிகழ்த்த முடிகிற*

*சாகசங்களும் சாதனைகளும்*

*பிறகொரு கணம் மாயையாகிறது*

என்ற வரி, ஏழ்மையில் இருப்போர் பணக்காரரைப் போன்று விரும்பியதைக் கொண்டு வாழ ஆசைப்படுவது முடியாத ஒன்று என்றும் இவையனைத்தும் மாயையே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, ஏழ்மையின் சிக்கலையும் இக்கொள்கையின் கூறாகக் கொண்டு இக்கவிதை அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

### தனிமனிதவாதம்

அடுத்த பின்நவீனத்துவ உட்கூறாகக் கருதப்படுவது, தனிமனிதவாதமாகும். தனிமனிதவாதமானது இக்கவிதைத் தொகுப்பில் பல கவிதைகளில் இடம்பெற்றுள்ளது எனலாம். தனிமனித உரிமைகளைக் கோருவதில் நாட்டம் காட்டாமல் எழுத்தாளர் இருத்தலியச் சிந்தனையில் பல கவிதைகளை எழுதியுள்ளதைக் காண முடிகின்றது. வாழ்க்கையின் சிக்கலுக்கு விடை தேடுவதே இருத்தலியச் சிந்தனையின் தலைமை நோக்கமாகக் கொண்டு வாழ்க்கை, தனிமை, காதல், காதலின் பிரிவு, மன இறுக்கம் என பல்வேறு கருவில் எழுத்தாளர் இத்தொகுப்பில் கவிதைகளை எழுதியுள்ளார். வாழ்க்கையைப் பற்றி கூறுகையில்,

*சொற்களின் பாதங்கள் வழவழப்பானவை*

*நேற்றைய இடத்திலிருந்து நகர்ந்த அவை*

*புதிய அருத்தத்தோடு*

*ஒவ்வொரு நாளும் காட்சிதரும்*

என்று 'மறைவிடம்' என்ற கவிதையின் வரியில் வாழ்வின் நிலையில்லாத் தன்மையில் நாம் பயனிக்கும் கருத்தை வலியுறுத்துகின்றது. தொடர்ந்து, 'நினைவுக்கு வராத காரணங்கள்' என்ற கவிதையில்,

*நாங்கள் பிரிந்ததற்கான காரணத்தை*

*மாறி மாறி கேட்டுக் கொண்டோம்.*

*சிறிது நேரம் அமர்ந்து*

*இருவருமாய் யோசித்தோம்*

என்ற வரிகளும் 'டிக்கெட்' என்ற கவிதையில்,

*உன்னுள் உடைந்த சில பகுதிகளை*

*ஒட்ட முடியும் எனவும்*

*அது தீர்க்கமாகச் சொன்னது*

என்ற வரிகளும் காதல், காதல் பிரிவுக்கான காரணங்களையும் அதனைக் களையும் வழிகளைச் சிந்திப்பதாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

### பகுத்தறிவாதம்

அதனைத் தொடர்ந்து, பகுத்தறிவாதக் கருத்துகளைக் கொண்ட கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது எனலாம். இறைநம்பிக்கைக்கு எதிரானதாக பகுத்தறிவுவாதம் அமையாது அதன் மூடநம்பிக்கைக்கு எதிராகவே இப்பகுத்தறிவுவாதம் அமைந்துள்ளது. 'தேவதைகளும் சாத்தான்களும்' என்ற கவிதையில்,

*என்னிடம் உள்ள தேவதைகளைவிட*

*சாத்தான்கள்*

*மிக நல்லவையாகவும்*

*பயனுள்ள ஜீவராசியாகவும் உள்ளன*

என்ற வரிகள், தன்னுள் உள்ள எண்ணத்தைச் சாத்தான் என்று குறியிட்டுப் பிறரது தேவதைகளிடமிருந்து தன்னைத் தற்காப்பதாகவும் எழுதப்பட்ட இக்கவிதையில் பல தீயவர் இறைவனின் பெயரிலும் நல்லவர் போலும் வேடமிட்டு ஏற்படுத்தும் சிக்கலைப் பற்றி கூறுகின்றன. தொடர்ந்து, 'சர்வம் ப்ரம்மாஸ்மி' என்ற கவிதையில்,

*ஒவ்வொரு கடவுளும்*

*ஒவ்வொரு விலை*

*என்ற வரியும்*

*அர்ச்சனைச் சீட்டு வாங்கிக்கொண்டு*

*அபிஷேகம் ஆராதனை முடித்து*

*வெளிவரும் போது*

*கடவுள்*

*'பாகி செப்புலோ ரிங்கிட்லா பாங்'* என்றார்.

என்ற வரியும் இக்காலத்தில் கடவுளை வைத்து வியாபாரம் செய்பவரைச் சிவப்பு விளக்குப் பகுதியில் இருக்கும் விலைமகளோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதாகத் தென்படுகிறது. இறைவனைச் சந்திக்கவும் நமது குறைகளைக் கூறவும் பணம் செலுத்திச் செல்வது கூடாது என்ற கருவில் இக்கவிதை எழுந்துள்ளது. இது போன்ற கவிதைகள் மக்களிடையே உள்ள மூடநம்பிக்கையைக் கேலி செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

## ஆய்வுக் கண்டுபிடிப்பு

'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பானது பல பின்நவீனத்துவக் கருத்துகளைக் கொண்டு ம. நவீனால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் முதலாளித்துவக் கொள்கையைக் கொண்ட கருக்களில் எழுந்த படைப்புகள் 35 கவிதைகளுள் நான்கு கவிதைகளில் இடம்பெற்றுள்ளது. அடிமைப் போக்கு, ஏழ்மை, தோழிலாளரின் இயல்பு வாழ்க்கை போன்ற கருக்களில் இக்காலத்திற்கு ஏற்றவாறான முதலாளித்துவக் கருத்துகள் பேசப்பட்டுள்ளன. முதலாளித்துவத்தை முற்றிலும் வெறுக்காது அதிகாரத்துவத்தை மட்டும் எதிர்க்கும் கருத்துகளாக இக்கவிதைகளில் இக்கருக்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து, பகுத்தறிவுவாதக் கொள்கைகளைக் கொண்ட கவிதைகளாக இத்தொகுப்பில் இரண்டு கவிதைகள் காணப்படுகின்றன. இறைவன் பெயரில் கொள்ளை அடிக்கும் செயலையும் போலி வேடம் அணியும் மனிதனின் போக்கையும் விமர்சனம் செய்து விவாதிப்பது போன்ற கருக்களில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. மூடநம்பிக்கையை அழிப்பதற்கு பகுத்தறிவுவாதமானது தேவைப்படுகிறது. ஆனால், இந்தப் பின்நவீனத்துவக் கோட்பாட்டில் சொல்லப்படும் பகுத்தறிவுவாதம், நாத்திகக் கருத்துகளைப் பரப்புகிறது என்ற கூற்றுத் தவறாகும் என்பது இக்கவிதைகளின் வழி தெரிகிறது.

இறுதியாக, இவ்விரு கொள்கைகளைக் காட்டிலும் தனிமனிதவாதக் கொள்கையானது இக்கவிதைத் தொகுப்பில், 14 கவிதைகளில் காணப்படுகின்றது. வாழ்க்கை, தனிமனிதப் புலம்பல், தனிமை, மன இறுக்கம், காதல், காதல் பிரிவு போன்ற பல கருக்களில் ஏதோவொரு கேள்விக்கு விடையைத் தேட நினைக்கும் இருத்தலியல் சாயல் கொண்ட கருத்தினை மையமாகக் கொண்டு இக்கவிதைகள் இயற்றப்பட்டுள்ளது. காதல் பிரிவுக்கும், தனிமைக்கும் வாழ்க்கையில் சந்திக்கும் சிக்கலுக்கும் ஏதோவொரு காரணம் இருப்பதாகவும் அதற்கான தீர்வைக் கண்டறியும் நோக்கிலும் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளது. ஆக, முதலாளித்துவம், பகுத்தறிவுவாதம் ஆகிய கொள்கைகளைக் காட்டிலும் தனிமனிதவாதக் கருத்துகள் இந்தச் 'சர்வம் ப்ரம்மாஸ்மி' கவிதைத் தொகுப்பில் அதிகம் பேசப்பட்டுள்ளது.

## முடிவுரை

பின்நவீனத்துவம் என்ற இக்கொள்கை பல

கருத்துகளை உள்ளடக்கிப் பேசப்பட்டுள்ளது. பின்நவீனத்துவத்தின் உட்கூறுகளாக வகைப்படுத்தப்படும் முதலாளித்துவம், தனிமனிதவாதம், பகுத்தறிவுவாதம் போன்ற கருத்துகள் தற்காலத்தில் அதிகம் பேசப்பட வேண்டிய கருத்தாகும். ஆபாசம், கொச்சை வார்த்தைகளை மட்டும் தவிர்த்து எழுதப்படும் பின்நவீனத்துவக் கருத்துகளைக் கொண்ட இலக்கியங்கள் வாசகர் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற வேண்டும் என்பது பரிந்துரையாக கொள்ளப்படுகிறது. அதிக கொச்சை வார்த்தைப் பயன்பாடு ஒரு இலக்கியத்தின் அழகியல் தன்மையை குறைக்கும் நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும். கொச்சை வார்த்தை, ஆபாசக் கூறுகள் இல்லாத பின்நவீனத்துவப் படைப்புகள் தமிழ் இலக்கியத்திற்கு வரவேற்கப்படுகின்றன.

## References


Abdulazim Ali, N., E. (2016). *Postmodernism Theory*. DOI: 10.13140/RG.2.1.4515.0327

Campbell, M. (2018). Postmodernism and Educational Research. *Open Journal of Social Sciences,* 6, 67-73. https://doi.org/10.4236/jss.2018.67006

Chithambaram, M., Karikalan, P. (2018). *Tiṟaṉāyvuk kōṭpāṭu*. New Delhi: Vikas Publishing House Pvt. Ltd.

Drafting Panel. (2020). *Economics*. Tamil Nadu: Ministry of Education.

Holtz, Peter. (2020). *Does Postmodernism Really Entail a Disregard for the Truth? Similarities and Differences in Postmodern and Critical Rationalist Conceptualizations of Truth, Progress, and Empirical Research Methods.* Frontiers in Psychology. 11:545959. doi: 10.3389/fpsyg.2020.545959

Jeyaraja, S. (2016). *Piṉṉavīṉattuvattai viḷaṅkik koḷḷal*. Sri Lanka: Murpokku Kalai Ilakkiya Peravai

Navaraj Cellaiah, S. (2000). *Putupputu cintaṉaikaḷ*. Tamil Nadu: Vilaiyaattu Publications.

Navin, M. (2009). *Sarvam Brahmaasmi*. Malaysia: Vallinam Publications

Premkumar, Ratnasabapathy. (2016). Plato and Postmodern Aesthetic Thoughts – A Philosophical View. Inbamohan, V. (Ed.), *Journal of Mozhital*. (pp.57-68.) https://www.researchgate.net/publication/342877678_Plato_and_Post_Modern_Aesthetic_Thoughts_A_Philosophical_ViewTamilpilettovum_pin_navinattuva_alakiyal_cintanaikalum-_oru_meyyiyal_nokku

Stephen, R., C., Hicks. (2004). *Explaining postmodernism: skepticism and socialism from Rousseau to Foucault.* United States of America: Scholargy Publishing.

Suppureddiar, N. (1988). *Pāṭṭut tiṟaṉ*. Tamil Nadu: Star Publications.